சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. OS. 258/2022**

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 10ம் நாள் செவ்வாய்க்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய **வா.சா.2**-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின் படி திருமதி.ஆர்.இளவரசி, எழுத்தர் நிலை-2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சம்பத் | தொழில் | ஆவண எழுத்தர் |
| தந்தை பெயர் | பொன்னுசாமி | ஜாதி | |
| கிராமம் | அம்மாபாளையம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | 58 |

**10.03.2026 முதல் விசாரணை**

சாட்சிக்கு நீதிமன்றம் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையின் பேரில் சாட்சி ஆஜர். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வா.சா.ஆ.1 அக்ரிமெண்ட் ஆவணமாக 2019ல் எழுதப்பட்டது. அந்த ஆவணம் கண்ணமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. கிரையத்தொகை எவ்வளவு கொடுக்கப்பட்டது என்று ஆவணத்தை பார்த்தால் சொல்ல முடியும். கிரையம் வாங்குவதற்காக ஒப்பந்தம் எழுதப்பட்டது. ஆவண எழுதுவதற்கான எழுத்தர் உரிமம் நகல் தாக்கல் செய்கிறேன் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) அது **சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். என் ஆதார் அட்டை நகல் தாக்கல் செய்கிறேன் (அசல் ஆவணத்துடன் சரிபார்க்கப்பட்டு) அது **சா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பம் போட்டவர்கள் யார் என்று அந்த ஒப்பந்தத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும்.